IV. GOVERNMENT BILL

The Madras Payment of Salaries and Removal of Disqualifications (Amendment) Bill, 1964.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Sir, I move—

" That leave be granted for the introduction of the Madras Payment of Salaries and Removal of Disqualifications (Amendment) Bill, 1964."

Mr. SPEAKER : The question is—

" That leave be granted for the introduction of the Madras Payment of Salaries and Removal of Disqualifications (Amendment) Bill, 1964."

The motion was put and carried and leave was granted.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Sir, I introduce the Bill.

Mr. SPEAKER : The Bill is introduced.

V.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1964-65—*cont.*

Demand No. XXIV—Labour including Factories.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

" That the Government be granted a sum not exceeding Rs. 1,28,31,600 under Demand No. XXIV—Labour including Factories."

திரு. சா. கணேசன் : லாபத்தில் தொழிலாளர்களும் பங்கு பெறும் உரிமை கிடைக்குமாறு ஏற்பாடு செய்வதன் அவசியத்தைப்பற்றி விவாதிக்க என் பேரில் உள்ள வெட்டுப் பிரேரணையை நான் பிரேரேபிக்கிறேன்.

" That the allotment of Rs. 1,28,31,600 under Demand No. XXIV—Labour including Factories be reduced by Rs. 100."

Mr. SPEAKER : The Demand and the cut motion are before the House for discussion.

***திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் இருக்கின்ற தொழிற்சாலைகளில் வேலை செய்கின்ற தொழிலாளர் களுடைய நிலை பற்றிய இந்த மானியக் கோரிக்கையில், சுதந்திராக் கட்சியினர் சார்பிலே கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து நான் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

இந்த விவாதத்திலே பங்கு கொள்வதற்கு முன்பாக, என்னுடைய பகுதியிலே இருக்கும் நெய்வேலி லிக்னைட் கார்போரேஷனிலே வேலை செய்கின்ற தொழிலாளர்களுடைய நலம் பற்றியும் அவர்களுக்கு இருக்கும் குறைபாடுகளைப் பற்றியும் இங்கே நான் எடுத்துக் கூற விரும்புகிறேன். தமிழகத்தைப் பொறுத்தவரையில், மத்திய சர்க்காருடைய நிறுவனமாக, பெரிய தொழிற்சாலையாக இன்றையதினம் நெய்வேலி ஸ்தாபனம் இருக் கிறது. 50 கோடி ரூபாயிலே ஆரம்பித்து, 70 கோடி ரூபாய் ஆகி, பிறகு 110 கோடி ரூபாயாகி, இப்பொழுது 130 கோடி ரூபாய் அளவிலே ஒரு